
# தேவையான ஒன்பது சுதந்திரங்கள்

## கிறிஸ்துவுக்கான பரந்த ஒரு இயக்கத்தைக் காண, மத பாரம்பரியங்களிடம் இருந்து சபைகளுக்கு இந்த சுதந்திரங்கள் வேண்டும்

தங்கள் சபைகளும் குழுக்களும் பல்கிப் பெருக வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கான ஒரு பணிமனையில் இந்த ஆவணத்தை நீங்கள் வழிகாட்டியாக உபயோகித்து இந்த ஒன்பது சுதந்திரங்களையும் வழங்கலாம்.

உங்களில் ஒருவர் இந்த ஒன்பது கருத்துக்களையும் முன் வைக்கும்போது, இன்னொருவர் திருவாளர் பாரம்பரியத்தின் பாத்திரத்தை ஏற்று நடத்தலாம். திரு பாரம்பரியம் ஒரு பெரிய தொப்பியையோ, அல்லது "திரு. பாரம்பரியம்" என்று பெரிதாக எழுதப்பட்ட அடையாள அட்டையையோ அணியலாம். நீங்கள் கூறும் முக்கியக்கருத்து ஒவ்வொன்றையும் மறுத்துப் பேசுவதே திரு. பாரம்பரியத்தின் வேலை. மற்றவர்கள் கேட்க நீங்கள் பதில் அளிக்கலாம். அதைவிட சிறந்தது மறுப்புகளுக்கு மற்றவர்களை பதில் கூற வைப்பதே. பணிமனையில் திரு. பாரம்பரியத்தை நீங்கள் அறிமுகப்படுத்தும்போது பின்வருமாறு எதையாவது கூறலாம். "திரு பாரம்பரியம் உங்கள் சபைக்கும் வந்து கொண்டு இருக்கலாம். அவர் எங்கும் இருப்பார். ஒருவேளை நீங்களே கூட அந்த திரு பாரம்பரியமாக இருக்கலாம்."



1. **கர்த்தர் சாத்தியமாக்கும் போது இளம் சபைகள் புதிய சபைகளை ஸ்தாபிக்கும் சுதந்திரம் போதனைகள்.**

- இந்த சுதந்திரத்தைப் பயன்படுத்திய வேதாகம மாதிரிகள் பர்னபாவும், எப்பாப்பிராவுமாகும்.
- வேதாகமத்தில் அப்போஸ்தலர்கள் சென்ற இடம் எல்லாம் புதிய சபைகள் தோன்றிப் பெருகின.
- கட்டிடம், சம்பளம் ஆகிய தேவைகள் இன்றியே புதிய சபைகள் இயங்குமாறு அப்போஸ்தலர்கள் செய்தனர்.

**திரு பாரம்பரியம் இது போன்றதொரு வாதத்தை முன் வைக்கிறார்:** "எங்களுடைய சபையின் கொள்கைப் படி ஒரு சபை புதிய சபை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமானால் முதலில் ஒப்புதலுக்காக எங்கள் வட்டாரத் தலைமையகத்திற்கு மனு செய்ய வேண்டும். தேவையான அளவுக்கு உறுப்பினர்களும், சில ஆண்டுகள் அனுபவமும், தேவையான நிதியாதாரமும் இருக்க வேண்டும்."

2. **மனிதன் உருவாக்கிய மத சட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு மேலாக கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியும் சுதந்திரம். போதனைகள்.**

- அப். 2 ல், பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் ஆதி புதிய ஏற்பாட்டு சபை உறுப்பினர்களுக்கு ஆதி முதலே கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியுமாறு போதித்தனர்.
- இயேசு பல விஷயங்களைக் கட்டளை இட்டார். அவற்றை ஏழு அடிப்படை கற்பனைகளாக நம்மால் கொடுக்க முடியும். அப். 2 ல் ஆதி சபையின் 3000 மனந்திரும்பிய விசுவாசிகள் அவற்றிற்குக் கீழ்ப்படிந்ததைப் பார்க்கிறோம். அவர்கள் மனம் திரும்பி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். ஞானஸ்நானத்தின் மூலம் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். கர்த்தரின் பந்தியை ஆசரித்து, ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து (அவர்களது ஐக்கியத்தில் இதைக் காணலாம்), ஜெபித்து, கொடுத்து, சீஷர்களை உருவாக்கினர்.

திரு பாரம்பரியம் இதுபோல் எதையோ கூறுகிறார். "என்னால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டும். ஒத்துப்போதலே ஒற்றுமையை நிச்சயப்படுத்துகிறது."

### 3. கிறிஸ்துவைத் தேடும் ஆனால் கிறிஸ்துவுக்குள் இன்னும் வராதவர்களையும் புதிய விசுவாசிகளையும் அவர்கள் வீடுகளில் சந்தித்து சுவிசேஷம் கூறி சீஷர்கள் ஆக்குவதிலும், அவர்களுடைய சமுதாயத்திலும் குடும்பத்திலும் ஆராதனை செய்வதிலும் சுதந்திரம். போதனைகள் :

- இதற்கு வேதாகம மாதிரிகளாக, பேதுரு கொர்நேலிவை சந்தித்ததையும், இயேசு எழுபது பேரை அனுப்பியதையும் காட்டலாம்.
- ஒருவர் விசுவாசி ஆன உடன் தங்கள் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் அதைப் பகிர்ந்து கொண்டதை லேவி, கொர்நேலியு, லிதியாள், பிலிப்பிய சிறையதிகாரி மற்றும் கிரிஸ்புவின் வாழ்க்கைகளில் பார்க்கிறோம்.
- அவர்கள் முடிந்த வரையில் புதிய விசுவாசிகளை அவர்களுடைய உறவினர்களோடும் சமுதாயத்தோடும் அன்பான உறவோடு இருக்கும்படியாகவே வைத்துக் கொண்டனர்.

திரு. பாரம்பரியம் இதுபோல் எதையோ கூறுகிறார்: "புதிய விசுவாசிகளை அவர்களுடைய நண்பர்கள் உறவினர்கள், சமுதாயத்தினர் ஆகியோரின் மோசமான கட்டுப்பாட்டில் இருந்து உடனடியாகப் பிரிக்க வேண்டும்."

### 4. புதிய விசுவாசிகளுக்கு தாமதம் இன்றி உடனடியாக ஞானஸ்நானம் கொடுப்பதற்கும் அவர்கள் கூடிவரும் இடங்களில் எல்லாம் கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதற்கும் சுதந்திரம். போதனை:

- வேதாகம முன் மாதிரியாக கிறிஸ்துவையும், அப். 2:38-47 ல் கூறப்படும் எருசலேம் சபையையும் கூறலாம்.

திரு பாரம்பரியம் இது போன்ற எதையோ கூறுகிறார்: ஞானஸ்நானமும் கர்த்தரின் பந்தியும் திருப்பதவி அமர்த்தம் (ordained) பெற்ற ஆயராலேயே நடத்தப்பட வேண்டும். ஞானஸ்நானம் பெறப் போகிறவர் தண்ணீர் மேல் நடக்க வேண்டும்.

### 5. பரிசுத்த ஆவியானவர் அளித்த எல்லா வரங்களையும் உபயோகித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், நெருக்கமும் அன்பும் நிறைந்த சபையாகவும் குழுக்களாகவும், ஒருவருக்கொருவர் சேவை செய்தல் (1 கொரி. 14:24-26). போதனை:

- கொரிந்தியர்களை இதற்கு வேதாகம மாதிரியாகக் கூறலாம்.
- பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்காக ஒவ்வொருவருக்கும் சில விசேஷமான ஆவிக்குரிய வரத்தை அளிக்கிறார்.
- ஒரு சபையைக் கட்டத் தேவையான எல்லா ஆவிக்குரிய வரங்களையும் ஒரு ஆயரோ அல்லது மூப்பரோ பெற்றிருப்பதில்லை.

திரு பாரம்பரியம் இது போன்ற ஏதோ ஒன்றைக் கூறுகிறார்: "எல்லாவற்றையும் நாகரிகமாகவும் ஒழுங்குமுறையாகவும் செய்ய வேண்டும். ஒழுங்குமுறை என்பது நான் சொல்வது எதுவோ அதுவே தான். கல்விகற்ற ஒரு பாதிரிதான் பொதுக் கூட்டங்களை வழி நடத்த வேண்டும்."

6. புதிய ஏற்பாட்டு தகுதிகளை உடைய மூப்பர்களுக்கு, சம்பளத்தோடோ சம்பளம் இன்றியோ சபைத் தலைமைப் பொறுப்புகளை அளிக்கும் சுதந்திரம். போதனை:

- வேதாகம மாதிரிகள் : பவுல், தீத்து உட்பட பலர்.

- வேதாகமத்தில் கூறப்படாத தகுதிகளில் இறையியல் படிப்பு, பொருளாதார வலிமை, சமுதாய அந்தஸ்து, இன சார்பு, மொழி ஆகியவைகள் அடக்கம். உங்கள் காலாச்சாரத்தில் வேதாகமத்தில் காணப்படாத தகுதி வரையறைகள் எவை?

  **திரு. பாரம்பரியம் இது போன்ற எதையோ கூறுகிறார்.** எங்கள் சபையின் சட்டவிதிகள் திருப்பதவி அமர்வு (ordained) பெற்ற பாதிரிகளையே அங்கீகரிக்கின்றன. முதலில் அவர்கள் எங்கள் விதிகள் கூறும் 750 தகுதிகளை நிறைவு செய்ய வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட கல்லூரிப் பட்டம் பெற்று, தொழில் ரீதியான சம்பளத்தைப் பெற வேண்டும்.

**7. ஒவ்வொரு குழுவின் அளவையும், அதன் தலைவர்களுக்கு உரிய முதிர்ச்சியையும் பொறுத்து, ஏதாவது புதிய ஏற்பாட்டு போதனை மற்றும் கல்வி றையைஅமுல்படுத்த சுதந்திரம். போதனை:**

- வேதாகம முன் மாதிரிகளில், புதிய ஏற்பாட்டு ஒருவருக்கு ஒருவர் கற்பனைகளும், இயேசுவின் உரையாடல் பாணியும் அடக்கம்.

  **திரு பாரம்பரியம் இது போன்ற ஒன்றை கூறுகிறார்.** "இந்த காலகட்டத்திற்கு தேவன் மேடைப் பிரசங்கத்தை கையான விதித்திருக்கிறார். மேடையில் சிறந்த தனித்தன்மையான பிரசங்கம் நமக்கு தேவைப்படுகிறது."

**8. புதிய சபைகளுக்கும் தலைவர்களுக்கும் உரிய உடனடித் தேவைகளுக்கு ஏற்ப புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிக்கும் சுதந்திரம்.**

- இதற்கு பயன்பாட்டு பட்டியல் கொண்ட ஒரு பாட திட்டம் தேவை. ஒவ்வொரு புதிய சபைகளின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப போதனையாளர்கள் நடவடிக்கைகளையும், பாடங்களையும் இதனால் தெரிந்து கொள்ள முடியும்.
- அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைக்கும் உடனடி தேவைகளுக்கும் ஏற்பவே இயேசு போதித்தார். புதிய கிரேத்தா சபையில் எது குறைவாக இருக்கிறதோ அதில் கவனம் செலுத்தும்படி பவுல் தீத்துவுக்கு கூறினார்.
- எல்லா புதிய சபைகளும் வெவ்வேறு விதமான தேவைகளை உடையது.

  **திரு பாரம்பரியம் இது போல் ஏதோ ஒன்றைக் கூறுகிறார்:** எனது பயிற்சி திட்டத்தில் ஒரு நிலையான பாட திட்டம் உண்டு. ஒவ்வொரு மாணவனும் ஒரே விஷயத்தையே படிக்கிறான். ஒரே இடத்தில் ஆரம்பித்து ஒரே வழியையே பின்பற்றுகிறான். அவர்கள் படிப்பது ஏதோ ஒன்றை எதிர்காலத்தில் நடைமுறை படுத்துவதற்காகவே.

## 9. பவுல் தீத்துவுக்கு அறிவுரை தந்ததுபோல, புதிய சபைகளையும், மேய்ப்பர்களை பயிற்றுவிப்பவர்களையும் கண்காணிக்கும் வட்டார ஒருங்கிணைப்பாளர்களை நியமித்துக் கொடுக்கும் சுதந்திரம் (தீத்து 1:5). போதனை:

- சுதந்திரமான வட்டார சபை பற்றிய முன்னுதாரணம் வேதாகமத்தில் இல்லை.
- ஒரு அனுபவம் பெற்ற போதகரின் அறிவுரையை நாடாததும் பெறாததுமே புதிய சபைகள் அடிக்கடி தோற்றுப் போவதற்கான காரணம்.

  **திரு பாரம்பரியம் இது போல் ஏதோ ஒன்றை கூறுகிறார்:** "இதைச் செய் அல்லது நம்பு என்று சபைக்கு ஆணையிடும் பேராயரையோ அமைப்பையோ நாங்கள் விரும்பவில்லை. அந்தந்தப் பகுதி சபைகளின் சுயாட்சியை நாங்கள் போற்றுகிறோம்" **அல்லது** நான் தான் இப்பகுதியை கண்காணிக்க நியமிக்கப்பட்ட பேராயர். என்னுடைய அதிகாரத்தில் தலையிடும் எந்த ஒருங்கிணைப்பாளரும் எனக்குத் தேவையில்லை. புதிய நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க எனக்கு நேரமும் இல்லை. எனவே நாங்கள் செய்து கொண்டிருப்பதையே தொடர்ந்து செய்வோம்.

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied.Download from www.Paul-Timothy.net